செ. கு. எண்:013 நாள் :09.01.2014

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 9.1.2014</u>

9.12.2013 அன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், அ.கோவில்பட்டி உட்கடை, வைகாசிப்பட்டி கிராமம் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த தத்தனேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. பாஷா என்பவரின் மகன் ஷேக் இப்ராஹிம்;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பாண்டூர் கிராமம் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கிளாப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகன் வீரன்;

15.12.2013 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அந்தநல்லூர் பகுதி, சிறுகமணி மேற்கு கிராமம் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பெட்டவாய்த்தலை கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னு என்பவரின் மகன் சரவணன் மற்றும் சரவணனின் மகன் சிறுவன் சந்தோஷ்;

16.12.2013 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சனமங்கலம் கிராமம் பேருந்து நிறுத்தம் அருகே நின்றுக் கொண்டிருந்த திருமதி கருப்பாயி;

திருவெறும்பூர் வட்டம், திருச்சிராப்பள்ளி – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலை அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த குண்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் ராஜபாண்டி;

சேலம் மாவட்டம், வலசையூர் கிராமம், சேலம் - அரூர் சாலை அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சுக்கம்பட்டி பகுதியைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் பெரியசாமி;

-- ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், க.பரமத்தி கிராமம் பேருந்து நிறுத்தம் அருகே 13.12.2013 அன்று கரூர் - கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து நிலை தடுமாறி எதிரே இருந்த கட்டடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில், பேருந்தில் பயணம் செய்த திருச்சிராப்பள்ளி நகரம், சந்துக் கடை பகுதியைச் சேர்ந்த திரு. திருமலை என்பவரின் மகன் கணேசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9